வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி

அசல் வழக்கு எண்.48/2019

பிரதிவாதி தரப்பு சாட்சி:1

| பெயர்: (பி.வா.சா.1 ) விஸ்வநாதன் | நாள்: 27.03.2026 |
|---|---|
| த.பெ: | |

**2026ம்** ஆண்டு மார்ச் **மாதம் 27ம் நாள் வெள்ளிக்கிழமை** பிரதிவாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் ச.பொன்ராஜ், அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**பி.வா.சா1 – குறுக்கு விசாரணைதொடர்ச்சி (வாதி தரப்பு):–**

**1)** எனது வீட்டிற்கு வடபுறம், எட்டியப்பன் வீட்டிற்கு தென்புறமாக எல்லையை தீர்மானம் செய்யும் அளவிற்கு கிழமேலாக பாகப்பிரிவினையில் குறிப்பிட்டுள்ள A. B, C ஷெட்டியூல்டுக்கு அத்தாக தாய்மனை சுவர் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தென்வடல் மெயின்ரோட்டில் இருந்து நேரடியாக போகலாம் என்றால் சரிதான். இந்த வழக்கு எனக்கு கிரயம் கொடுத்த ஜானகி பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது எனக்கு அறிவிப்பு அனுப்பியதற்கு பிறகுதான் தெரியும் என்றால் சரிதான். ஜானகி பெயரில் வழக்கு நிலுவையில் இருந்த நிலையில்தான் நான் ஜானகியிடமிருந்து வாங்கினேன் என்றால் வழக்கு நிலுவையில் இருந்தது தெரியாமல் வாங்கிவிட்டேன். ஜானகிக்கு என்ன உரிமை உள்ளதோ அதுபோல்தான் எனக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான். அதற்குமேல் கூடுதல் உரிமையை நானோ வாதியோ அனுபவிக்க உரிமை இல்லை என்றால் சரிதான்.

**2)** வழக்கு சொத்திற்கு அருகில் எனக்கு கூட்டாக சொத்துக்கள் இருப்பதால் இந்த

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 09:35:46 +0530

பாகப்பிரிவினையில் கண்ட A. B, C ஷெட்டியூல்டில் உள்ள அனுபவங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தென்வடல் மெயில் ரோட்டில் இருந்து எங்களுடைய வீடுகளுக்கு வடபுறமாக உள்ள தாய்மனை சுவருக்கும், நான் கிரயம் பெற்ற வீட்டிற்கும் இடையில் கிழமேலாக 3 அடி தடம் உள்ளது என்றால் சரிதான். நான் பாகபிரிவினை ஆவணத்தை படித்துப் பார்த்துதான் கிரயம் செய்தேன் என்றால் சரிதான்.

**3)** B ஷெட்யூல்க்கு வடபுறமாக தாய் மனை சுவற்றிற்கு தென்புறமாகவும் C ஷெட்டியூல் வரை 3 அடி தடம் இருந்தது என்றால் சரிதான். C ஷெட்யூல்டு சொத்தில் கிழக்கு கோட்டில் கிணறு உள்ளது என்றால் சரிதான். மேற்படி தென்வடல் பாதையில் வழி நெடுகிலும் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு கொடுப்பதற்காக கொடுமுடி பேரூராட்சி சார்பாக ஆற்று குடிநீர் பைப் லைன் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**4)** வா.சா.ஆ.1 ஆவணத்தில் A ஷெட்யூல்டில் கண்டுள்ள மேற்படி வீட்டில் வடபுறம் தாய்மனை சுவர் நீங்கலாக 3 அடி அகலத்தில் நம்மில் 3 நபரான ஷேமாவதி என்கிற ஹேமகிருஷ்ணன் இதில் அடையும் C பாக சொத்தின் மேல்புற பொலிவரை நம்மில் 2, 3 நபர்கள் செல்ல ஒரு தடம் விட்டுவிட வேண்டியது, அதன் பின் தடம் கிடையாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் மேற்படி தடத்தில் போகவர உள்ள நடதட பாத்தியத்துக்கு இடையூறு ஏற்படும் வாக்கில் இந்த பாகஸ்தர் எவ்வித நடவடிக்கையும் செய்யக்கூடாது, வருங்காலத்தில் இந்த சொத்தை இந்த பாகஸ்தர் விற்பனை செய்ய நேர்ந்தால் அவரிடமும் கிரயம் பெறுவருக்கும் இந்த சரத்து பொருந்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 09:35:50 +0530

**5)** வா.சா.ஆ.1 ஆவணத்தில் B பாக சொத்தில் மேற்படி வீட்டு இடத்தில் வடபுறம் உள்ள தாய்மனை சுவர் நீங்கலாக 3 அடி அகலத்தில் நம்மில் 3 நபரான ஷேமாவதி என்கிற ஹேமகிரு ஷ்ணன்இதில் அடையும் C பாக சொத்தில் மேல்புறம் பொலிவரை நம்மில் 2, 3 நபர்கள் செல்ல ஒரு தடம் விட்டு விடவேண்டியது, அதன் பின் தடம் கிடையாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**6)** மேற்படி பாக பிரிவினை ஆவணத்தில் C பாக சொத்தில் மேற்படி வீட்டு இடத்திற்கு கிழக்கு அக்ரஹார வீதியில் இருந்து நம்மில் 1, 2 லக்கமிட்டவர்கள் வீட்டின் வழியாக இந்த இடம் வரை 3 அடி அகலத்தில் வரும் தடத்தில் இந்த பாகஸ்தர் போகவர உள்ள நடதட பாத்தியம் சேரவும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி C ஷெட்டியூல்டு சொத்தில் சேந்துகிணறு 1 பூராவும் C ஷெட்டியூல் பாகஸ்தருக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். C ஷெட்டியூல் சொத்தில் வடபுற செக்குபந்தியாக முன்னால் மணியம் அமரர் ராமசாமி அய்யருக்கு பாத்தியப்பட்டிருந்து தற்போது எட்டியப்பன் ஆசிரியர் கிரயம் வாங்கியுள்ள வீட்டிற்கு தெற்கு என்று செக்குபந்தி காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**7)** C பாக சொத்தின் மேல்புற பொலி என்பது B பாக சொத்தின் கிழக்கு கோட்டின் எல்லைப் பகுதி என்றால் சரிதான். B பாக சொத்தின் மேல்புற பொலி என்பது A பாகத்தின் கிழக்கு கோட்டு எல்லை என்றால் சரிதான். மேற்படி பாக பிரிவினை ஆவணத்தில் பொது சரத்துக்களில் நம்மில் 1 லக்கமிட்ட ஜானகியின் பாகத்தில் உள்ள மின் இணைப்பு ஜானகிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது, நம்மில் 2, 3 ல்க்கமிட்டவர்கள் தனியாக மின் இணைப்பு பெற்றுக் கொள்ள வேண்டியது, மேற்படி 2, 3

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.27 09:35:54 +0530

லக்கமிட்டவர்கள் தனியாக மின் இணைப்பு பெறும்வரை மேற்படியார்கள் நம்மில் 1 லக்கமிட்டவர் மின் இணைப்பில் மின்சாரம் எடுத்து உபயோகித்துக் கொள்ள உரிமை உண்டு என்று ஒரு தற்காலிக ஏற்பாடாக உள்ளது என்றால் சரிதான். B, C ஷெட்டியூல்தாரர்கள் தனியாக மின் இணைப்பு பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். 2023ல் பெற்றுக் கொண்டார்கள். நான் கிரயம் வாங்கிய பின்னிட்டும் B. C ஷெட்டியூல்தாரர்கள் A ஷெட்டியூல்டில் இருந்த மின் இணைப்பை அனுபவித்தார்கள் என்தற்கான எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் வெளியூரில் இருந்ததால் எனது பெயரில் மின்இணைப்பை மாற்றவில்லை. எனவே சந்திரசேகரன் பெயரில் உள்ள மின் ரசீதை தாக்கல் செய்துள்ளேன்.

**8)** மேற்படி 3 அடி தடத்தில் அவரவர் பாகத்தில் சாக்கடை பைப் லைன் அமைத்துக் கொள்ள வேண்டியது என்றும், காவிரி குடிநீர் இணைப்பு பெற்றால் குழாய் பதித்துக் கொள்ள வேண்டியது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பாகத்தை ஒட்டி நேர் மேல்புறம் தென்வடல் ரோட்டில் சாக்கடை வசதி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரயம் பெற்றுள்ள வீட்டில் இருந்து நேரடியாக எனது வீட்டிற்கு மேல்புறம் உள்ள சாக்கடையில் எனது வீட்டு கழிவுநீரை நிலத்தடி பைப் லைன் அமைத்து கழிவு நீரை வடிக்க முடியும் என்றால் B. C ஷெட்டியூல்டுதாரர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள உரிமையை போல் எனக்கும் மேற்படி 3 அடி தடத்தில்தான் வடிக்க முடியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள B. C ஷெட்யூல்டு வீடு மற்றும் காலி இடத்தினை வாதி கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 09:35:58 +0530

9) நான் கிரயம் பெறும்போதே வாதி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள B, C ஷெட்யூல்டு சொத்தினை கிரயம் பெற்று அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிணற்றை பொருத்து 3 லக்கமிட்டவருக்கு பாத்தியப்பட்டது என்றும், 1, 2 லக்கமிட்டவர்கள் தனித்தனியாக குடிநீர் வசதி செய்யும் வரை 1, 2 லக்கமிட்டவர்கள் 3 லக்கமிட்டவர் பாகத்தில் சேந்துகிணறு வரை வந்து தண்ணீரை எடுத்துக் கொள்ள வேண்டியது என்று ஒரு தற்காலிக ஏற்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தற்காலிக ஏற்பாட்டின்படி ஆவணங்களில் உள்ள சங்கதிகளின்படி நான் கிரயம் பெற்றுள்ள A ஷெட்யூல் சொத்திற்கு குடிநீர் இணைப்போ, போர்வெல் அமைத்து தண்ணீர் எடுப்பதற்கோ இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இரண்டு வீட்டிற்கு இரண்டு கதவு எண் வருவதாலும், மற்ற வீட்டு நபர்களிடம் தடையில்லா சான்று வாங்கவேண்டும் என்பதாலும் என்னால் வாங்க இயலவில்லை.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.27 09:36:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.